உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—சச.] ஸர்வஜித்து-௵ ஆடி௴ [பகுதி—கூ.
Vol. 44. July—August 1947. No. 9.

உள்ளுறை.

சுதந்திரதினவிழாநிகழ்ச்சி:—பத்திராசிரியர் கஉரு—கஉஅ
இந்திய தேசீயக்கொடிவாழ்த்து:- T. K. இராமாநுஜையங்கார் கஉகூ—கங0
பாரத சுதந்திரத்திருநாட்பாட்டு:- } திரு. க. சு. நவநீதகிருஷ்ண பாரதியாரவர்கள் கஙக—கஙஉ
பாரத சுதந்திரதினவிழா வாழ்த்துப்பாக்கள்:— ஷை கஙஉ
ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷைத்தேர்ச்சிக்குறிப்பு:— (அனுபந்தம் 1—10)

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1947.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—சச.] சருவஜித்து-ஹு ஆடி-மீ [பகுதி. கூ.

Vol. 44. July—August 1947. No. 9.

சுதந்திரதினவிழா நிகழ்ச்சி

நிகழும் ஸர்வஜித்துஹு ஆடிமீ 30உ (15—8—47) வெள்ளிக்கிழமை நம் நாடு தன்னரசுநாடாகியது. அதனால் மகிழ்ச்சிமிக்க நம் நாட்டார் எங்கும் நம் தாய்நாட்டின் மணிக்கொடியினையேற்றி விழா வெடுத்துக் குதூகலிப்பாராயினர். அன்று பகல் 12-மணிக்குமேல் நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்திலும் சுதந்திரதினவிழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தமிழ்ச்சங்கம், வாழைகமுகுகள் நாட்டி மாவிலைத்தோரணம் தூக்கிப் பன்னிறத்துகிற்கொடி யேற்றிப் பல மலர்மாலைகள் நாற்றி வெள்ளை நுண்மணலெங்கும் பரப்பி மேதகு விரைநீர் தெளித்து நன்கு அலங்கரிக்கப்பெற்று விளங்கியது.

சங்கத்தின் காரியநிருவாகஸபையுறுப்பினர்களும் மதுரை நகரப்பிரமுகர்களும் சங்கக் கலாசாலையாசிரியர்களும் மாணவர்களும் பிறரும் சங்கமண்டபத்தில் வந்து குழுமினர். கடவுள்வாழ்த்துடன் விழாத் தொடங்கியது.

சங்கக் காரியதரிசி ஸ்ரீமான் N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள், அவ்விழாநாளவைக்குத் தலைவராகவீற்றிருந்து சிறப்பிக்க வேண்டுமென்று சங்கத்தின் துணைத்தலைவரும் சிறந்த தமிழறிஞரும் வழக்கியலறிஞருமான ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களை வேண்ட அவையோரிசைவுபெற்று அவர்கள் தலைமைத் தானத்தமர்ந்து நம் நாட்டின் பெருமையையும் அது தன்னரசு பெறுதற்குச்செய்த தியாகங்களையும் விளக்கி இனிதாக முன்னுரை கூறினார்கள்.

அதன்மேல் சங்கக் காரியதரிசியவர்கள், இச்சுதந்திரதினவிழாவின் முதலுறுப்பாகிய கொடியேற்றத்தை நன்கு நிகழ்த்தித்தருமாறு மதுரைநகரப் பிரமுகர் ஸ்ரீமான் ராவ்பஹதூர் R. நரஸிம்மையங்காரவர்களை வேண்டிக்கொள்ளும்முறையில், "இன்று நம் சுதந்திரதினம். சென்றசில நூற்றாண்டுகளாக அன்னியராட்சியில் இருந்த நம் தமிழ்நாடு இன்று விடுதலையடைந்து தன்னரசுநாடாகிறது. தனக்கென அன்றிப் பிறர்க்காகவேவாழ்தல், சேரசோழ பாண்டியமன்னர்களால் புரக்கப்பெற்று உலகம்புகழநின்ற நாகரிகத்திற் சிறந்த தமிழரது பழைய பண்பாகும். அந்த உண்மையை ஆராய்ந்துணர்ந்து தமிழுலகுக்குப் புகட்டியவர் முச்சங்கங்களிலும் முதிர்ந்த அறிவுடையவராய்விளங்கிய அருந்தமிழ்ப்புலவரேயாவர். அயலார்கோலின்கீழ்த் தமிழர் அமர்ந்தகாலத்தில் மாற்றாந்தாய் வயப்பட்ட குழவிபோலான தமிழைப் பலநூற்றாண்டுகளாகச் சேதுமன்னர்கள் புரந்துவருகின்றனர். அவர்கள் வழித்தோன்றலும் கல்வி ஒழுக்கம் கொடை முதலிய நற்குண நற்செயல்களால் அக்குலப்பெருமாணிக்கமாய் விளங்கியவரும் ஆன பாலவநத்தம் ஜமீந்தார் ஸ்ரீமான். பொன். பாண்டித்துரைத்தேவரவர்களால் 24-5-01ல் இந்த நான்காஞ்சங்கம் நிறுவப்பெற்றுள்ளது. முன்னர் விளங்கிய முச்சங்கங்களிலும் வீற்றிருந்த அருந்தமிழ்ப்புலவர் ஆக்கித்தந்த உலகநூற்பொருள்களும் அறிவநூற்பொருள்களும் என்றும் நின்று நிலவச்செய்வதும், அவைகளிற் சிதைந்தும் மறைந்தும் உள்ளவைகளை ஆராய்ச்சியால் மறுபடி பிறப்பித்தலுமே இச்சங்கத்தின் பணியாகும். 46 ஆண்டுகளாக மாட்சிமைதங்கிய ஸேதுவேந்தராதரவும் வண்மையும்பெற்று இச்சங்கம் அப்பணியை இடைவிடாது இயன்றவளவில் ஆற்றிவருகிறது. மொழிவழியே நற்பொருள்களும், அவற்றையறியுமாற்றால் நல்லுணர்வும், அவ்வுணர்வின்வழியே நல்லொழுக்கமும், அவ்வொழுக்கத்தின்வழியே நல்வாழ்க்கையும் அமைதலின், தமிழர் நல்வாழ்க்கைக்குத் தமிழ்மொழிவளர்ச்சியும் அதிற் பொதிந்துள்ள அரும்பெரும்பொருள்களின் உண்மையுணர்வும் இன்றியமையாதனவாகும். தன்னரசாட்சியில் அவை மேலும் மேலும் சிறந்திடுக. நாம் இந் நன்னாளைப் பாரதத்தாயின் கொடியினையேற்றிக் கொண்டாடுகிறோம். இதைத் தமிழ்க்கொடி

என்று சொல்லுவதும் தகும். போர்வலியாற் பிறக்கும் பிரதாபத்தைச் சிவப்பும், தமிழருடைய தூயவாழ்க்கையை வெண்மையும், அவர்தம் நிலவளத்தைப் பச்சையும் குறிக்கும். இந்நிறங்களை மூவேந்தருக்கும், முதற்கடவுளரென நாம் போற்றும் மூவருக்கும் முறையே அமைக்கினும் ஆம்; ஆதலின் எல்லாப்படியாலும் இக்கொடியை நாம் வாழ்த்தி வழிபடுதல் முறையேயாகும். மதுரைமாநகரில் பலநூற்றாண்டுகளாக வாழ்ந்து சிறந்த நற்குடிப்பிறப்பும் அறிவு ஒழுக்கம் ஆதியனவும் வாய்ந்து சிறந்தவரும் சென்ற 50 ஆண்டுகளாகப் பொதுநலப்பணிபுரிந்து பல பெரியோரால் பாராட்டப்பெற்றவரும் ஆன ஸ்ரீமான் ராவ்பஹதூர் R. நரஸிம்மையங்காரவர்கள் இந்தக் கொடியை யேற்றுதற்கு மிகவும் தகுதியுடையவராவர். நம் நாட்டின் வீரம் ஒருபுறமும் வளம் மற்றொருபுறமும் விளங்க நம் வாழ்க்கைத்தூய்மை நடுவண் நின்றொளிரும் இக்கொடியை எற்றுவிக்கும்படி ஸ்ரீமான் ராவ்பஹதூர் R. நரஸிம்மையங்காரவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று பேசிமுடிக்க, ஸ்ரீமான் R. நரஸிம்மையங்காரவர்கள், அதற்கு இசைந்து "இப்பாரதநாட்டில் அக்பராட்சியும் அசோகனாட்சியும் ஒன்றுக்கொன்று ஆதாவாய் ஓங்கிச் சிறந்து நீடுவாழ்க" என்று வாழ்த்திச் சங்கத்தின் முன்றிலில் நாட்டப்பெற்ற சித்திரத்தூணத்து நிலவிய மணிக்கொடியினைச் சங்கக்கலாசாலைமாணவர்கள்பாடிய வாழ்த்துப்பாட்டின் இசையொடெழுந்துபரவ விரித்துயர்த்தி, நம்நாட்டார் சுதந்திரம் பெறுதற்குச் செய்த கிளர்ச்சிகளையும், அதனால் விளைந்த பயன்களையும், அவ்வாறு கிளர்ச்சிசெய்தவர்களுள் மாட்சிமிக்க பொன்னுசாமித்தேவரவர்கள் குமாரரும் அறிவு ஒழுக்கம் ஆற்றல் ஆதியவற்றால் மேம்பட்டவரும் பாலையம்பட்டி ஜமீந்தாரும் ஆன ஸ்ரீமான் கோட்டைஸாமித்தேவர் முதலிய பலர் நம் நாட்டில் தன்னரசாளும்தகுதியுடையவர்களாய் விளங்கியதையும், அவர்களோடு தமக்கும் இத்தமிழ்ச்சங்கத்துக்கும் இச்சங்கத்தை நிறுவிய பாண்டித்துரைத்தேவரவர்களுக்கும் உள்ள தொடர்பினையும் விளக்கி, அத்தொடர்புபற்றியே தாம் அன்று கொடியேற்ற இசைந்தமைதெரிவித்து, ஒரு நாடும் அதன்மொழியும் சிறப்பது தன்னரசினால் என்றும், அவை ஒன்றையொன்று சிறப்பிப்பன என்றும், இன்று தன்னரசுற்ற

நிலையில் நம் தமிழ்நாடும் தமிழ்மொழியும் பெருமையுறுமென்றும் பேசிமுடித்தார்கள்.

அதன்பின் செந்தமிழ்ப்பத்திரிகையின் உதவியாசிரியர் T. K. இராமானுஜையங்கார் கொடி, தேவர் அரசர் முதலியோர்க்குரிய தசாங்கங்களில் ஒன்றென்றும் அது தெய்வத்தன்மையுடையதென்றும் அதனால் அது மிகவும் போற்றப்படுமென்றும் கூறித் தேவர்களுக்கும் பழைய தமிழரசர்களுக்கும் அமைந்த கொடிகளையும் அவற்றின் பெருமைகளையும் விளக்கி, அம்முறையில் இப்பொழுது பாரதநாட்டுக்குரியதாய்விளங்கும் மணிக்கொடியின் வரலாற்றினையும், அக்கொடியுள் வாய்ந்த நிறம் முதலியவற்றாற் சுட்டப்படும் பொருள்களையும் விரித்துரைத்து அக்கொடிவிஷயமாகத் தாம் இயற்றிய வாழ்த்துப்பாடல்களைப் படித்தனர்.

அப்பால் அவைத்தலைவரவர்கள், சுதந்திரத்தினால் விளையும் நலன்களையும் தன்னரசுபெற்ற நம்நாட்டுக் கொடியின் சிறப்பினையும் விரித்துரைத்து அன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பாராட்டி முடிவுரை கூறினார்கள்.

பின்பு சங்க நிருவாகக்குழுவினருள் ஒருவரான மதுரமித்திரன் ஸ்ரீமான். ந. சுப்பிரமணியம் அவர்கள் அன்று சுதந்திரதினவிழாவை இனிதுநடத்துவித்த அவைத்தலைவருக்கும், தன்னரசுபெற்ற நம்நாட்டுக்கொடியினையேற்றி இனியசொன்மாரிபொழிந்த ஸ்ரீமான் ராவ்பஹதூர் K. நரஸிம்மையங்காரவர்களுக்கும் சங்கத்தார்வேண்டியதற்கிசைந்து விஜயம்செய்து விழாவைச் சிறப்பித்த கனவான்களுக்கும் வந்தனோபசாரம் கூறி, எல்லோருக்கும் சந்தனம் புஷ்பம் வெள்ளிலை பாகு பழம் முதலியவை வழங்கக் கடவுள்வாழ்த்துடன் சுதந்திரதினவிழா நன்கு நிறைவேறியது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பத்திராசிரியர்.

இந்திய தேசியக்கொடிவாழ்த்து

மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையின் உதவியாசிரியர்
T. K. இராமாநுஜையங்கார் இயற்றியது.

இந்தியத் தாய்கொடி பாரீர்—இதை
ஏற்றி மகிழ்ந்து புகழ்ந்திட வாரீர்.

(1) நின்று நிலவுமோர் கம்பம்—அதன்
நெற்றியி லேசெம்மை வெண்மை பசுமை
ஒன்றிய நற்றுகி லாலே—தாயின்
ஒண்கொடி தோன்றும் பொலிவினைப் பாரீர். (இந்தியத்)

(2) மற்றதிற் றோன்றும் நிறங்கள்—இந்த
வையகத் துள்ளோர் மனங்கொளத் தக்க
நற்றிற மேசில காட்டி—எந்த
நாளும் நமக்கு நலந்தரு மன்றோ. (இந்தியத்)

(3) செந்நிறம் காட்டிடும் பண்பு—நல்ல
தீரம் தியாகம் எனஇரண் டென்பார்
மன்னிய வெள்ளை நிறந்தான்—நன்கு
வாய்மை யொடுசமா தானம் குறிக்கும். (இந்தியத்)

(4) பச்சை நிறம்தெரி விக்கும்—என்றும்
பார்புகழ் வீரம் பயில்விசு வாசம்
மெச்சும் இவையெலாம் காட்டி—மிக
வீறுற் றிலங்கும் வியன்கொடி காணீர். (இந்தியத்)

(5) வெண்மை நிறத்துகி லூடே—உயர்
வென்றி யசோகன் அறவாழி தோன்றும்
மண்மிசை மாந்தருக் கெல்லாம்—அது
மன்னறம் யாவும் வகுத்திடல் காணீர். (இந்தியத்)

(6) மற்றதன் நீழலில் என்றும்—பல
மாநில மாந்தர் வணங்கினர் வாழ்த்த
வெற்றித் திருவொடு மேவி—என்றும்
விண்ணவர் போல விளங்கிடு வோமே. (இந்தியத்)

(7) வாழிய இந்திய நாடே—வாழி
வாழிய இந்திய வான்கொடி நாளும்
வாழியிம் மாநில மெல்லாம்—அறம்
வாழியென் றேநின்று வாழ்த்துவம் யாமே. (இந்தியத்)

(1) பூந்தா மரையுறையும் புண்ணியனும் போற்றுசிறப்
பேய்ந்தொளிரும் இந்தியத்தாய்க் கேற்ற தசாங்கங்களிலே
சாந்தம் பொறுமை தயையிவற்றுக் காகரமாய்
வாய்ந்த மணிக்கொடியை வாயார வாழ்த்துவமே
வையமெலாம் கொண்டாட வாழியென வாழ்த்துவமே.

(2) புண்ணியரா டென்று புவியனைத்தும் பொன்னுலகில்
விண்ணவரும் மேவ விழை இந்தியநாட்டின்
எண்ணரிய சீர்த்தியினுக் கேய்ந்த மணிக்கொடியை
நண்ணி நலந்தழைய நாவார வாழ்த்துவமே
நாளும் வாழியென நாவார வாழ்த்துவமே.

(3) செயிர்தீர் பசுமைவெண்மை செம்மையினால் என்றும்
தயிரியமே த்யாகம் சமாதானம் வாய்மை
உயரின்மேல் அன்பொருவர்க் கோடாத வீரம்
மயர்வறவே காட்டும் மணிக்கொடியை வாழ்த்துவமே
மாநிலமெல் லாம்போற்ற வாழியென வாழ்த்துவமே.

(4) பூவலயம் காத்தருளும் பூவைப்பூ மேனியன்பால்
மேவும் கருட வியன்கொடிபோல் வாழியரோ
நாவலந் தீவத்தார் நயனம் களிசிறப்ப
வாவும்எழில் இந்தியத்தாய் வண்ண மணிக்கொடியே.

(5) அந்தா மரையுளயன் அன்னக் கொடிபோல
நந்தாப் புகழால் நனிசிறந்து வாழியரோ
மந்தா நிலம்வீச வானின் மிசைபறந்து
சந்தாபம் தீர்த் திந்தியத்தாய் தனிக்கொடியே.

(6) கங்கையொடு திங்கள் கடிக்கொன்றை சூடியொரு
மங்கையிடப் பாகம் மருவினோன் வான்கொடிபோல்
அங்கணில மெல்லாம் அறந்தழைய வாழியரோ
எங்களெழில் இந்தியத்தாய்க் கேற்ற மணிக்கொடியே.

(7) ஆழி புடைசூழ் அகிலத் தசோகனற
வாழியொடு மேவி யறந்தழைய—வாழியரோ
வண்மைமிகும் இந்தியத்தாய் வண்ண மணிக்கொடிதான்
மண்மிசையோர் வாழ்த்த மகிழ்ந்து.

பாரத சுதந்திரத்திருநாட்பாட்டு

[உயர்திருவாளர் சு. சு. நவநீதகிருஷ்ணபாரதியாரவர்கள் இயற்றியவை]

பத்தொன்பான் நூறுடனுற் பத்தேழாம் ஆண்டிற்
பார்பரவும் ஆகஸ்டுப் பதினைந்தாம் நாளே
இத்தரையில் அடிமையெனும் இடர்விளைக்கும் பேயை
எற்றியினி மீளாச்சீட் டீந்தனுப்பும் நாளே.

1 அடிமையினுல் மதிமயங்கி ஆவேசம் ஏறி
அறியாமற் பாடிவந்த உன்மத்தப் பாட்டும்
கொடுமையினுற் குறைகூறும் குழறுபடைப் பாட்டும்
கூறுதற்கு நாநாணும் குணம்பெருக்கும் திருநாள்; (பத்தொன்)

2 பாரதமே யாழாக நாங்களிசை யாகப்
பாரதமும் இசையாக யாழாக நாங்கள்
நேருவும்யாழ் வல்லவனுக் காந்தியம் சுதியா
நிகழ்ந்தசுதந்திரப்பாட்டு நெகிழ்ந் திசைக்கும் மணநாள்; (பத்)

3 நிரந்தரமாங் காந்தியத்தின் நேருமன மகிழ்வால்
நிறைகுமரி யானந்த நீத்தமதில் தோய்ந்தே
சுதந்திரபா ரதமென்றே இமய வுச்சிக் கேறிச்
சூழுலகெ லாங்கேட்கச் சொல்விடுநன் னுளே; (பத்தொன்பான்)

4 ஏட்டினிலே எழுதிவந்த சுதந்திரமாங் கதையை
எங்கண்ணுற் கண்டுபற்றி யெங்களையும் மறந்தே
நாட்டவர்கள் ஊர்தோறும் நவரசங்கள் பொழிய
நடனங்கள் புரிந்தின்பக் கடல்தோயும் நாளே; (பத்தொன்)

5 ஒருபோழ்தும் பாரதமா தேசத்தில் அடிமை
ஊத்தைவாழ் வில்லையென வுறுதிசெய்து கொண்டே
இருநூறு வருடங்கள் ஏற்றாத கொடியை
ஏற்றுதற்கே இடமளித்த இவ்வரிய திருநாள்; (பத்தொன்பான்)

6 மங்கள - குங் கும - மஞ்சள் மணச்சடங்கின் கீழே
மன்னுயிர்கள் தளிர்க்கவரும் பசும்பயிர்க்கு மேலே
தங்குபுகழ் வெள்ளைக்குள் தருமசக்ரம் தழைக்கத்
தான்விளங்கும் கொடியிமயத் தேற்றிவைக்கும் நாளே; (பத்)

7 காடும்விளை புலனுகக் கைகள்தொழில் காய்க்கக்
கருத்தும்அன்பிற் குளிக்கவிழி கடைக்கணித்துக் காக்க
நாடும் எங்கள் வீடாகப் பாரதமா நாடு
நலன்சிறக்க உயிரெல்லாம் நயந்துவரும் நன்னுள்; (பத்தொன்)

8 பறையருக்கும் புலையருக்கும் பரமவைதி கருக்கும்
பாரபட்ச மில்லாமற் பரமனருள் கொழிக்கும்
மறைவகுத்த நெறியில்வரு மாண்பொருள்க ளனைத்தும்
வழங்கிவிருந் தளித்துமகிழ் மங்கலநற் றிருநாள்; (பத்தொன்)

பாரத சுதந்திரதினவிழா

வாழ்த்துப்பாக்கள்

[உயர்திருவாளர் க. சு. நவநீதகிருஷ்ணபாரதியாரவர்கள் இயற்றியவை.]

அன்புவெள்ளம் பெருக்கெடுப்ப அயலாரும் நோவாமல் அகன்று வாழ்த்த
இன்பவெள்ளம் பெருக்கெடுப்ப இத்தனைநாட் பட்டதுயர் இன்பா மாறப்
பொன்புரையும் காந்திகடைக் கணித்தருள நேருமுகம் பொலிவு பூப்ப
இன்றலவோ தன்னாட்சிச் சுவையறிந்தோம் இந்தநன்னாள் என்றும் வாழி. (1)

நனவாகி எமைநலிந்த பொல்லாத அடிமையெனும் நமனார் ஆட்சி
கனவாகிக் கதையாகி இருந்தஇடம் தெரியாமே கழிந்து போக
மனமேவு தன்னாட்சி வடிவெடுத்து வெளிவந்து வாகைசூடி
இனிதாகப் பாரதத்தைக் கைப்பிடித்த மங்கலச்சீர் இயம்பி வாழ்வாம். (2)

ஆட்சிமொழி நாட்டுமொழி யாக்காணப் புலவர்முகத் தழகு காணக்
காட்சியையோர் புதியவுணர் வூக்கிவரும் கவின்காணக் காதல் காண
மாட்சிதரும் அசோகனருள் மணியாழிக் கொடியுயர்த்தி மானங் காண
மீட்சியிலாச் சுதந்திரத்தை மீட்டளித்த காந்திய வீறு வாழி. (3)

சிறைசென்று பெற்றசெல்வம் சித்ரவதை யேற்றுவந்த செம்மைச் செல்வம்
முறைகொல்லக் கண்கலங்கி மூர்ச்சித்த மூர்ச்சையினால் முதிர்ந்த செல்வம்
தறைமல்க நிறைகருணைச் சாத்துவிகப் போர்கொடுத்த தருமச் செல்வம்
பொறைநல்கும் பாரதத்துக் காந்தியச் செல்வமிது பொலிந்து வாழி. (4)

மங்கலநீர் ஆடிப்பட் டுடுத்துச்சாந் தணிந்துமலர் மாலை சூடித்
தங்குநிறை குடம்வைத்து விளக்கேற்றி விரைபுகைத்துத் தரும சக்ரம்
பொங்குமணிக் கொடியேற்றிப் பாரதத்தாய் வாழ்கவெனப் புகன்று பாடி
இங்கிதமா விருந்தருத்தி ஆனந்தக் கூத்தயர்ந்தே இனிது வாழ்வாம். (5)

பாரதமா தேவியன்பாற் பாவலர்கள் வாழ்த்தியம்ப
நேருவள்ளல் வாழியரோ நீடூழி—யாருடனும்
நன்றாகும் அன்பினால் ஞாலமெலாம் காந்தியத்தோ
டொன்றாகி வாழி யுவந்து. (6)

பிறநாடும் எம்நாட்டின் பேறுபெறற் காகும்
துறைநாடி நாமுழைப்போம் தோய்ந்து. (7)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் 1947-ஆம்௵ மார்ச்சு௴ 8௳ நடத்திய

ஆங்கிலகலா சாலைத் தமிழ்ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு.

[எண்கள் ரிஜிஸ்டர்நம்பரைக் குறிப்பன.]

I. பி. ஏ. பரீக்ஷை.

1-வதுவகுப்பு.

24 G. கோவிந்தராசலு, கவர்ன்மெண்டுகாலேஜ், கும்பகோணம்.
(முதற்பரிசு ரூபா 50 பெறத்தக்க *தங்கப்பதக்கம்)

1 T. V. வெங்கடேசன், அமெரிக்கன்காலேஜ், மதுரை.
[இரண்டாவது (ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்கார் B.A. B.L. அவர்கள்) பரிசு ரூபா 45. பெறத்தக்க *தங்கப்பதக்கம்.]

27 S. வெங்கடேசன், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
(மூன்றவதுபரிசு ரூபா 40.)

34 S. முத்துகிருஷ்ணன், கவர்ன்மெண்ட் காலேஜ், கும்பகோணம்.
(நான்காவதுபரிசு ரூபா 35.)

2-வதுவகுப்பு.

ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி:— 5, 7, 11, 17 to 21, 22 (a).

கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்:—23, 25, 26, 28 to 33.

மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்துகாலேஜ், திருநெல்வேலி:—35.

முனிஸிபல்காலேஜ், சேலம்:—39, 40.

பச்சையப்பா காலேஜ், சென்னை:—43.

ஸெண்ட்ஸேவியர்காலேஜ், பாளையங்கோட்டை:—47, 53.

---

* பவுன் முதலியவற்றின் விலையேற்றத்தினல் இச்சங்கத்தின் நிர்வாக ஸபையார் 21—6—43-ல்செய்த தீர்மானப்படி தங்கப்பதக்கங்களுக்குப் பிரதியாக ரூபா அளிக்கப்படும்.

II. எப். ஏ. பரீக்ஷை.

2-வதுவகுப்பு.

அமெரிக்கன்காலேஜ், மதுரை:—58, 60, 61.

ஸெண்ட்ஜோஸப்காலேஜ், திருச்சி:—64, 66, 69, 70, 71, 75, 76, 78, 79, 80, 82, 83, 85, 91, 92, 97, 99, 107, 111, 113, 114, 116, 117, 118, 122 to 125, 129, 132, 137, 141, 147, 148, 149, 158, 176, 181.

நாஷனல்காலேஜ், திருச்சி:—188, 189.

Holy Cross College, தெப்பக்குளம், திருச்சி:—192.

கவர்ன்மெண்ட்காலேஜ், கும்பகோணம்:-194, 195, 196, 200, 201, 205, 207, 208, 210, 212, 213, 216, 218 to 224, 227, 228, 231, 232.

முனிசிபல்காலேஜ், சேலம்:—247, 250, 253, 254.

மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை:—258.

ஊரீஸ்காலேஜ், வேலூர்:—263, 271.

பிரஸிடென்ஸிகாலேஜ், சென்னை:-286, 287, 291, 294, 295, 299, 300, 306, 307, 309.

பச்சையப்பாகாலேஜ், சென்னை:—315.

ஸெண்ட் ஸேவியர் காலேஜ், பாளையங்கோட்டை:-319, 320, 321, 324, 327.

III. மெற்றிக்குலேஷன்பரீக்ஷை.

1-வதுவகுப்பு.

1065 S. இராசகோபாலன், கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
[முதற்பரிசு ரூபா 30. (வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாயும்)]

1964 C. முத்துசாமி, போர்டுஹைஸ்கூல், கோவிற்பட்டி.
(இரண்டாவதுபரிசு ரூபா 25.)

2150 V. ராமசேஷன், போர்டுஹைஸ்கூல், உசிலம்பட்டி.
(மூன்றவதுபரிசு ரூபா 20.)

927 N. நாகேசுவரன், மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு.
(நான்காவதுபரிசு ரூபா 15.)

1057 S. சந்தானராஜகோபாலன், கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
(ஐந்தாவதுபரிசு ரூபா 12.)

1136 A. சீனிவாசன், ஸர். சிவஸ்வாமிஐயர்ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி
450 மு. பனையப்பன், ஸெண்ட்மேரிஹைஸ்கூல், மதுரை.
955 P. சின்னப்பன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
1393 V. துளசி, லேடிவில்லிங்டன் ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை.
2005 S. V. கணேசன், T. A. High School, திருவிடைமருதூர்.
2071 A. K. சுவாமிநாதன், மெதோடிஸ்ட்மிஷன்ஹைஸ்கூல், நாகபட்டினம்
934 K. V. சுப்பிரமணியன், மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு.
793 R. பத்மாசனி, ஸாவித்திரிவித்யாசாலை, H. G. High School, திருச்சி.
2147 K. குருவையா, போர்டுஹைஸ்கூல், உசிலம்பட்டி.
1060 A. நாகராசன், கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
2154 K. R. சீனிச்சாமி, போர்டு ஹைஸ்கூல், உசிலம்பட்டி.
939 N. K. சீனிவாசன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
1820 M. ஆனந்தன், ஹிந்துஹைஸ்கூல், ஆம்பூர் N. A. Dt.
2107 A. கிருஷ்ணன், போர்டு ஹைஸ்கூல், கமுதி.
525 P. குளத்து, ஸெண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை.
921 R. சுவாமிநாதன், மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு.
1050 K. P. கிருட்டினமூர்த்தி, கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
1061 G. சீனிவாசன் ஷை ஷை
1654 P. I. கணேசன், ஹிந்துநாடார்விக்டோரியா ஹைஸ்கூல், சிவகாசி.
2148 K. A. மாயாகாண்டிபன், போர்டுஹைஸ்கூல், உசிலம்பட்டி.
935 N. சிவசுப்பிரமணியன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
1752 A. ராமமூர்த்தி, L. M. C. High School, சீர்காழி, தஞ்சாவூர் ஜில்லா.
2103 T. முத்திருளாண்டி, போர்டுஹைஸ்கூல், கமுதி.
932 V. லக்ஷ்மீநாராயணன், மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு.
1066 V. சங்கரன், கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
857 வே. பத்மநாபன், மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்துகாலேஜ் ஹைஸ்கூல், திருநெல்வேலி.
957 K. நடராஜன், மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு.
1687 S. Muhamad Basheerudin, போர்டுஹைஸ்கூல், திருவாரூர்.

925 G. V. சுந்தரராஜன், மஹாஜன ஹைஸ்கூல், ஈரோடு.
1782 R. பக்தவத்ஸலம், S. M. S. ஹைஸ்கூல், காரைக்குடி.
1917 S. சீதாராமன், A. A. M. High School, திண்டிவனம்.
2026 R. கிருஷ்ணமூர்த்தி, நாஷனல்ஹைஸ்கூல், நாகபட்டினம்.
405 சுப்பிரமணியன், ஸெண்ட்மேரிஹைஸ்கூல், மதுரை.
550 சி. கோபால்சாமி, ஷை ஷை
598 V. சௌந்தரராஜன், அமெரிக்கன்காலேஜ்ஹைஸ்கூல், தல்லாகுளம் P. O. மதுரை.
1082 N. இராதாகிருஷ்ணன், கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
1089 P. கிருட்டினமூர்த்தி, ஸெண்ட்பீடர்ஹைஸ்கூல், ஷை
853 T. P. சீனிவாஸன், மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்துகாலேஜ் ஹைஸ்கூல், திருநெல்வேலி.
1129 P. R. குருமூர்த்தி, ஸர். சிவஸ்வாமிஐயர்ஹைஸ்கூல், திருக்காட்டுப் பள்ளி.
1137 S. முத்தீசுவரநாதன், ஷை ஷை
1626 A. காளியப்பன், ஹிந்துநாடார்விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி.
1750 S. பிரணதார்த்தி, L. M. C. High School, சீர்காழி, தஞ்சாவூர் ஜில்லா.
1409 T. வைத்தியநாதன், முனிஸிபல் ஹைஸ்கூல், மாயவரம்
1753 V. இராமமூர்த்தி, L. M. C. High School, சீர்காழி, தஞ்சாவூர் ஜில்லா.
2001 R. சிவசுப்பிரமணியன், T. A. High School, திருவிடைமருதூர்
2007 N. பாலசுப்பிரமணியன் ஷை ஷை
486 I. அருள்சாமி, ஸெண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை
792 S. பட்டம்மாள், ஸாவித்ரிவித்யாசாலை H. G. High School, திருச்சி.
841 G. நாராயணன் C. M. High School, திருநெல்வேலி.
919 B. M. நந்தி, ஸ்ரீராமகிருஷ்ணமிஷன்வித்யாலயம், பெரியநாயக்கன் பாளையம்.
1092 V. கணேசன், ஸெண்ட்பீடர்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.
505 சிவசாமி, ஸெண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை.
1130 T. N. கோவிந்தராஜன், ஸர். சிவஸ்வாமிஐயர் ஹைஸ்கூல், திருக் காட்டுப்பள்ளி.

1439 N. கிருஷ்ணன், முனிசிபல் ஹைஸ்கூல், கொரநாடு, மாயவரம்.

1444 T. S. சீனிவாசன். ஷை ஷை

1645 N. பார்த்தசாரதி, ஹிந்துநாடார் விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி.

1742 M. அப்துல்ஸலாம், S. M. ஹிந்துஹைஸ்கூல், சீர்காழி, தஞ்சாவூர் ஜில்லா.

1790 K. இராமச்சந்திரன், ஸ்ரீசரஸ்வதிஹைஸ்கூல், கோனபட்டு.

1973 S. கைலாசம், போர்டு ஹைஸ்கூல், கோவில்பட்டி.

2259 B. பெத்தணசாமி, V. M. Board High School, பெரியகுளம்.

1067 S. அண்ணாமலை, கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

1097 N. பக்கிரிசாமி, ஸெண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

1229 V. B. சீனிவாசன், டான்பாஸ்கோ ஹைஸ்கூல், வேலூர்

2-வது வகுப்பு.

சேதுபதிஹைஸ்கூல், மதுரை:—331, 332, 334, 336, 338, 339, 341, 349, 350, 353 to 357, 359, 360, 370.

A. R. High School, மதுரை:—374, 375.

U. C. High School, மதுரை:—378, 379, 381, 383, 386, 388.

ஸௌராஷ்ட்ராஹைஸ்கூல், மதுரை:—398 to 400, 402.

ஸெண்ட்ஜோஸப் கேர்ல்ஸ்ஹைஸ்கூல், மதுரை:—403.

ஸெண்ட்மேரி ஹைஸ்கூல், மதுரை:—406 to 409, 412, 413, 416, 419, 420, 422 to 426, 428, 429, 434, 436, 438 to 440, 443, 444, 446, 448, 451, 452, 454, 456, 458 to 461, 465, 468 to 470, 473 to 477, 480, 481, 483 to 485, 487, 488, 490, 491, 496 to 502, 504, 506, 509 to 511, 513 to 521, 523, 524, 526 to 528, 530, 532 to 535, 541, 544, 547 to 549.

அமெரிக்கன் காலேஜ் ஹைஸ்கூல், தல்லாகுளம் Po. மதுரை:—551, 555, 557, 558, 562, 563, 567 to 570, 575, 576, 579, 586, 587, 589, 590, 594 to 597, 599, 600, 602 to 605.

P. K. N. High School, திருமங்கலம்:—607 to 610, 612 to 615, 617, 618, 621, 622, 624, 626, 627.

K. V. Sala High School, விருதுநகர்:—630, 632, 633, 635, 637, 641 to 643, 645, 648, to 651, 655, 657, 658, 660, 662.

ராஜாஸ் ஹைஸ்கூல், இராமநாதபுரம்:—663 to 665, 668 to 670, 672, 674, 675, 678, 680, 681, 683 to 690, 692, 695, 702, 703 705, to 708, 711 to 715.

E R. High School, தெப்பக்குளம், திருச்சி:—716 to 723, 726 to 728 730 to 732, 735 to 737, 739 to 742, 744 to 750.

பொன்னையா ஹைஸ்கூல், பாலக்கரை, திருச்சி:-751, 752, 754, 756, 758, 763, 765, 769 to 774, 777, 780, 781.

பிஷப்ஹீபர் ஹைஸ்கூல், தெப்பக்குளம் Po. திருச்சி:—783 to 788.

சரஸ்வதி வித்யாசாலை, H. G. High School, திருச்சி:—789, 790, 794, 795, 797.

போர்டு ஹைஸ்கூல், குளித்தலை:—799.

போர்டு ஹைஸ்கூல், லால்குடி:—804 to 806, 808, 812.

போர்டு ஹைஸ்கூல், அரியலூர்:—813, 814, 816, 817, 819 to 822.

C. M. High School, திருநெல்வேலி:—823 to 825, 829 to 839, 842, 844 to 848.

மதுரை திரவியம் தாயுமானவர் ஹிந்துகாலேஜ் ஹைஸ்கூல், திருநெல்வேலி:- 850, 852, 856, 858, 860, 861, 864 to 867.

Little Flower High School, சேலம்:—868 to 872, 875, 878 to 881, 884, to 889, 891, 892, 895, 897, 900.

கோகுல்நாத் ஹிந்து மஹாஜன ஹைஸ்கூல், சேலம்;—904, 908.

St Mary's High School for girls, அரிசிப்பாளையம், சேலம்:—909, 910, 912 to 917.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் வித்யாலயம், பெரியநாயக்கன்பாளையம்:—920.

மஹாஜனஹைஸ்கூல், ஈரோடு:—922 to 924, 928, 931, 937, 938, 940 to 943, 945 to 947 950, 952, 954, 959 to 961, 963.

டையமண்டுஜுபிலி ஹைஸ்கூல், கோபிசெட்டிபாளையம்:— 964 to 966.

முனிஸிபல் ஹைஸ்கூல், கூடலூர் NT:—969.

ஸெண்ட் ஆன்ஸ் கேர்ல்ஸ் ஹைஸ்கூல், புதுப்பாளையம், கூடலூர் N. T. 971 973 to 977.

மஹாராணீஸ் கேர்ல்ஸ் ஹைஸ்கூல், புதுக்கோட்டை:—978 to 988.

C S. M. High School, புதுக்கோட்டை:— 989 to 994, 999 to 1001, 1004, 1006.

பிருஹதாம்பாள் ஹைஸ்கூல், புதுக்கோட்டை:—1007, 1008, 1010, to 1019, 1021 to 1025, 1032 to 1036, 1040.

கலியாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர்:-1045 to 1049, 1053 to 1056, 1058, 1059, 1062 to 1064, 1068, 1069, 1071 to 1079, 1081, 1083, 1084, 1086 to 1088,

செயிண்ட்பீடர் ஹைஸ்கூல், தஞ்சாவூர்:—1090, 1091, 1093, 1095, 1098 to 1102, 1105 to 1108.

வீரராகவ ஹைஸ்கூல், தஞ்சாவூர்:— 1111, 1115 to 1117, 1122.

ஸர். சிவஸ்வாமிஐயர் ஹைஸ்கூல், திருக்காட்டுப்பள்ளி:-1125, 1126, 1128, 1131 to1135, 1138 to 1140.

போர்டு ஹைஸ்கூல், அய்யம்பேட்டை:—1143 to 1147.

ஹிந்து ஹைஸ்கூல், ஸ்ரீவில்லிபுத்தூர்:—1149, 1150, 1152, 1154, 1156, to 1160, 1162, 1164, 1168 to 1171.

வூரீஸ் ஹைஸ்கூல், வேலூர்:—1173, 1174, 1180, 1182, 1184 to 1188, 1191, 1196 to 1200, 1202, 1204 to 1208, 1211, 1212, 1214 to 1216, 1218 to 1220.

டான்பாஸ்கோ ஹைஸ்கூல், வேலூர்:—1222, 1223, 1225 to 1228, 1230 to 1236.

வெஹர்மன் மெமோரியல் கேர்ல்ஸ் ஹைஸ்கூல், சித்தூர்:—1238 to 1242.

ஹிந்து ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை:—1244, 1246, 1247, 1251 to 1256, 1259.

பச்சையப்பா காலேஜ்ஹைஸ்கூல், சென்னை:—1262, 1263, 1265 to 1267 1269, 1276, 1279, 1282.

ஸ்ரீராமகிருஷ்ணமிஷன் ஹைஸ்கூல், தியாகராயநகர்:— 1284 to 1286, 1288, 1290 to 1293, 1298 to 1300, 1302, 1305, 1307, 1309, 1311, 1312, 1315, 1316, 1318, 1321.

R. B. C. C. C's High School, பெரம்பூர், சென்னை:—1322, 1326, 1327, 1329 to 1332, 1334 to 1336, 1338 to 1343, 1346 to 1351.

தொண்டைமண்டலம் ஹைஸ்கூல், சென்னை:—1354 to 1358.

லேடி சிவஸ்வாமிஐயர் ஹைஸ்கூல் மயிலாப்பூர், சென்னை:—1361, 1364, 1366 to 1370, 1372 to 1377.

R. M. S. H. School, for Grils, தியாகராஜநகர்:—1379 to 1381.

லேடிவில்லிங்டன் ஹைஸ்கூல், திருவல்லிக்கேணி, சென்னை:—1382, 1384, 1386, 1388, 1389, 1392, 1394, 1395, 1397, 1400, 1402.

முனிஸிபல் ஹைஸ்கூல், மாயவரம்:—1403 to 1408, 1410 to 1426, 1428 1429.

முனிஸிபல் ஹைஸ்கூல், Kornad, மாயவரம்:—1430 to 1438, 1440 to 1443, 1445 to 1449.

பிண்டிலே ஹைஸ்கூல், மன்னார்குடி:—1450 to 1452, 1454, 1456, to 1461, 1463, 1465 to 1468, 1470, 1471, 1475 to 1480, 1482, 1483, 1486, 1487, 1489, 1490, 1493 to 1503, 1506 to 1508, 1510.

நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி:—1511, 1517, 1520, 1522, 1524.

பச்சையப்பா ஹைஸ்கூல், காஞ்சீபுரம்:—1525 to 1527, 1529 to 1531, 1533 to 1541, 1543 to 1545, 1547 to 1550.

ராமகிருஷ்ணமிஷன்ஹோம், ஆத்தூர் (Po), செங்கற்பட்டு ஜில்லா:—1551 to 1560, 1563 to 1566.

முனிஸிபல் ஹைஸ்கூல், வாலாஜாபேட், N. A. Dt.:—1567, 1569, 1571 to 1573.

ஸெண்ட் கொலம்பா ஹைஸ்கூல், செங்கற்பட்டு:—1576.

ஸெண்ட்மேரி கேர்ல்ஸ் ஹைஸ்கூல், செங்கற்பட்டு:—1578.

போர்டு ஹைஸ்கூல், பாபநாசம்,—1579 to 1586, 1588 to 1591.

ஸெண்ட் பிரான்ஸிஸ் ஸேவியர் ஹைஸ்கூல், தூத்துக்குடி:—1593, 1595 to 1597.

முனிஸிபல் ஹைஸ்கூல், திருவண்ணாமலை:—1598 to 1606.

போர்டு ஹைஸ்கூல், ஆரணி, N. A. Dt:—1607.

போர்டு ஹைஸ்கூல், போளூர் N. A. Dt. 1611 to 1616, 1618 to 1621, 1624, 1625.

ஹிந்துநாடார்விக்டோரியாஹைஸ்கூல், சிவகாசி:— 1627, 1629 to 1631, 1633, 1635 to 1638, 1640, 1641, 1643, 1644, 1647 to 1653, 1655.

போர்டு ஹைஸ்கூல், திருவாரூர்:—1658, 1659, 1661, 1662, 1665, 1667 to1670, 1672, 1674, 1676, 1677, 1680 to 1683, 1685, 1688, 1689, 1692, 1693.

போர்டு ஹைஸ்கூல், கூத்தாநல்லூர், தஞ்சாவூர்ஜில்லா:—1694 to 1700,

போர்டு ஹைஸ்கூல், திருத்துறைப்பூண்டி, தஞ்சாவூர்ஜில்லா:—1701.

முனிஸிபல் ஹைஸ்கூல், விழுப்புரம்:—1702 to 1705, 1708 to 1710, 1715, 1719.

S. B. F. High School, ராமச்சந்திரபுரம்:—1720, 1723, 1726 to 1729 1731, 1732, 1734.

S. M. Hindu High School, சீர்காழி, தஞ்சாவூர்ஜில்லா:—1735, 1736 1739, 1745, 1746, 1748.

I. M. C. High School, சீர்காழி, தஞ்சாவூர்ஜில்லா:—1749, 1751, 1754 to 1759, 1761 to 1764, 1767 to 1771.

S. M. S. High School. காரைக்குடி:—1772 to 1781, 1783, 1784

ஸ்ரீசரஸ்வதி ஹைஸ்கூல், கோனுபட்டு:—1786, 1788, 1789, 1792, 1794 to 1796.

போர்டு ஹைஸ்கூல், நாங்குனேரி:—1797, 1801 to 1806.

போர்டு ஹைஸ்கூல், திருச்செந்தூர்:—1807, 1811.

ஹிந்து ஹைஸ்கூல், ஆம்பூர்:—1814, 1817, 1818, 1823, 1824.

கன்கார்டியா ஹைஸ்கூல், ஆம்பூர்:—1826 to 1828, 1830, 1832, 1834 1840.

ஸெண்ட் ஸேவியர் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை:—1858 to 1863.

ஸெண்ட் ஜான்ஸ் காலேஜ் ஹைஸ்கூல், பாளையங்கோட்டை:—1865 to 1867 1869, 1872, 1873, 1878, 1880 to 1882, 1886, 1891 to 1898.

St. Ignatius Convent High School, பாளையங்கோட்டை:—1900, 1902 1903, 1905, to 1908.

A.A.M. High School, திண்டிவனம்:—1909 to 1914, 1919 to 1923, 1925, 1926.

போர்டு ஹைஸ்கூல், பட்டுக்கோட்டை:—1927 to 1933, 1943, 1945.

போர்டு ஹைஸ்கூல், கோவில்பட்டி:—1948 to 1950, 1954 to 1957, 1960, 1962, 1963, 1965, 1968 to 1970, 1974.

A. C. High School, பள்ளத்தூர்:—1975, 1976, 1980, 1983, 1986 to 1988.

T. A. High School, திருவிடைமருதூர்:—1992, 1994, 1995, 2000, 2003, 2006, 2008, 2011, 2013, 2015, 2016, 2020 to 2022.

நாஷனல் ஹைஸ்கூல், நாகபட்டினம்:—2025, 2029 to 2032.

மெதோடிஸ்ட் மிஷன் ஹைஸ்கூல், நாகபட்டினம்:—2041, 2042, 2044 to 2046, 2048, 2049, 2058, 2063, 2069, 2070, 2072 to 2077, 2079 to 2086, 2089, 2095, 2096.

போர்டு ஹைஸ்கூல், கமுதி:—2098, 2100 to 2102, 2106, 2108, 2109, 2112, 2114, 2116.

போர்டு ஹைஸ்கூல், சோழவந்தான்:—2119 to 2123, 2125, 2126, 2128 2132, 2134, 2135, 2138, 2140, 2144.

போர்டு ஹைஸ்கூல், உசிலம்பட்டி:—2145, 2146, 2149, 2151 to 2153, 2155 to 2165, 2167 to 2169.

கோமதி எட்வர்டு போர்டு ஹைஸ்கூல், சங்கரன்கோவில்:—2170 to 2176, 2179 to 2184, 2186, 2187, 2190 to 2193.

ராஜா சேதுபதி போர்டு ஹைஸ்கூல், பரமக்குடி:—2200, 2201, 2206, 2209, 2211 to 2214, 2216, 2218 to 2220, 2222, 2224, 2226 to 2229, 2231, 2233 to 2235, 2237 to 2239, 2241 to 2243, 2246, 2247.

V.M. போர்டு ஹைஸ்கூல், பெரியகுளம்:—2248 to 2254, 2257, 2258, 2260 to 2263, 2267, 2269, 2271, 2276 to 2282, 2284 to 2288, 2290 to 2294.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
26—9—'47.

R. Shanmuga Rajeswaran,
அக்கிராசனாதிபதி.